DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 110 / 2019
Deposition of PW2- திருமதி.சேர்மலை (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.06.2026.

1, 2 எதிரிகள் ஆஜர் .

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1 ம் எதிரி மகாதேவன் என்பவருக்கு என் மகள் சந்திரலேகா– வை திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனது மகளுக்கு நடைபெற்ற திருமணம் இருதரப்பு பெரியோர்களால் பேசி முடிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு என் மகளும், 1 வது எதிரியும் ஆண்டிபட்டியில் தான் வசித்து வந்தார்கள். அதன் பின்பு கொண்டமநாயக்கன்பட்டியில் வசித்து வந்தார்கள். இரண்டு இடத்திலும் சுமார் 1 1/2 வருடம் கணவன் , மனைவியாக வாழ்ந்து வந்தார்கள். என் மகளுக்கு குழந்தை பிறப்பு எதுவும் இல்லை.

2. அதனால் இருவருக்கும் அடிக்கடி குடும்ப சண்டைகள் ஏற்பட்டு வந்தன. அது தொடர்பாக பலமுறை பல காவல் நிலையங்களில் புகார் கொடுத்து அது தொடர்பாக விசாரணை செய்தனர். போலீசார் விசாரணையின் போது எனது மகள் 1 வது எதிரியுடன் வாழமாட்டார் என்றும், அவர் நகையையும், விவாகரத்தும் கொடுத்தால் போதும் என்று எங்கள் தரப்பு விசாரணையில் தெரிவித்தோம். ஆனால் எதிரி நகைகளை கொடுக்கவில்லை, விவாகரத்தும் கொடுக்கவில்லை. பல முறை பெரியவர்கள் மூலமும், நாட்டு பஞ்சாயத்து மூலமும் விவாகரத்திற்கு முயற்சி செய்தோம். 1 ம் எதிரி விவாகரத்து கொடுக்க முன்வரவில்லை.

3. அதனால் வேறு வழி இன்றி நாங்கள் எனது மகள் மூலம் விவாகரத்து கோரி தேனி, சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்தோம். நீதிமன்றம் மூலம் எனது மகளுக்கு விவாகரத்து பெற்று தற்போது என் மகளுக்கு வேறு ஒரு நபருடன் திருமணமாகி வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது வீட்டிற்குள் நான், எனது 2 வது மருமகன் வேல்முருகன், என் மகள் சந்திரலேகா, சூர்யா, ஜஸ்வர்யா ஆகியோர்கள் தூங்கிக் கொண்டு இருந்தோம். எனது வீட்டின் தலவாசல் கதவானது தேக்கு மரத்தினால் செய்யப்பட்ட கதவாகும். மேற்படி கதவு

உள்பக்கம் பெரிய தாழ்பாள் இரும்பு பூட்டு கொண்ட கதவாகும். மேற்படி கதவினை எத்தி உடைக்க முடியாது என்றும், கடப்பாறை போன்ற ஆயுதங்களை கொண்டு தான் உடைக்க முடியும் என்றால் சரிதான்.

4. எனது வீட்டினை ஒட்டி நிறைய குடியிருப்புகள் உள்ளது. கதவினை எதிரிகள் தட்டிய சத்தம் கேட்டு நாங்கள் திறந்தபோது 1 ம் எதிரி என்னுடன் தகராறு செய்தார். அப்போது ஆட்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள். சம்பவத்தின் போது கல் எறிந்ததால் எனது பெரிய மகளுக்குகாயம் ஏற்பட்டது. என் மகளுக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனை சென்றோம். அந்த சம்பவ நேரத்தில் நாங்கள் போலீசார்க்கு போன் மூலம் தகவல் சொன்னோம். போலீசார் வந்து விசாரித்து சென்றார்கள், எதிரிகளை தேடினார்கள். சம்பவத்தன்று என் மகள் தான் போலீசாரிடம் இது தொடர்பாக புகார் கொடுத்தார். அந்த புகார் எனது வீட்டில் வைத்து நாங்கள் சொல்லச் சொல்ல போலீசார் எழுதிக் கொண்டார்கள்.

5. மறுநாள் காவல் நிலைய விசாரணைக்காக சென்றோம். நான் சொல்வது போல் இரவு 12.00 மணிக்கு மேல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், எனது மகளுக்கு விவாகரத்து மற்றும் நகையை தரவில்லை என்ற விரோதத்தில் நடக்காத சம்பவத்திற்கு பொய்யான வழக்கு போட்டு அந்த வழக்கிற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த தேதியில் நான் சொல்வது போல் என் வீட்டில் எவ்வித கதவு உடைக்கப்படவில்லை என்றும், வீட்டில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கு பின்பு தான் என் மகளுக்கு நீதிமன்றத்தில் விவாகரத்து கிடைத்தது. இந்த சம்பவத்திற்கு பின்பு 1 ம் எதிரி விவாகரத்து வழக்கிற்கு ஆஜராகாததால் என் மகளுக்கு விவாகரத்து கிடைத்தது என்றால் சரிதான்.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.06.01 14:15:23 +0530

Judicial Magistrate,
Andipatti.